சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண். 215 / அ5 / 2024 நாள்: .02.2024.

பொருள் : பள்ளிக் கல்வி - மேல்நிலைத் தேர்வு முதலாம் ஆண்டு (+1) மற்றும் இரண்டாம் ஆண்டு (+2) மார்ச் 2024 செய்முறைத் தேர்வுகள் - சார்ந்து.

பார்வை 1 அரசாணை (2டி) எண். 50, பள்ளிக் கல்வி (அ.தே.1)த் துறை, நாள். 09.08.2017.

2 சென்னை-06, அரசுத் தேர்வுத் துறை இயக்குநர் அவர்களின் கடித. ந.க.எண். 000853/எச்1/2024 நாள். 23.01.2024.

அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் அறிவுரைக்கிணங்க சென்னை மாவட்டத்தில் 11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள் 12.02.2024 முதல் 24.02.2024 வரை நடைபெறும் என அரசு தேர்வுத் துறை இயக்குநரகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11 மற்றும் 12 ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள் நடத்தப்படும் விவரம்:

| | |
|---|---|
| முதல் சுற்று (Spell - I) | 12.02.2024 முதல் 17.02.2024 வரை |
| இரண்டாம் சுற்று (Spell - II) | 19.02.2024 முதல் 23.02.2024 வரை |

மேற்காணும் 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகளை எந்தவித புகார்களுக்கு இடம் அளிக்காமல் நடத்த முதன்மை கண்காணிப்பாளர்களான செய்முறைத் தேர்வுமைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

செய்முறைத் தேர்வுக்கான வெற்று மதிப்பெண் பட்டியலினை, சென்னை-06, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளவாறு 12 ஆம் வகுப்புகளுக்கு 05.02.2024 முதல் 12.02.2024 வரை மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கு 13.02.2024 முதல் 17.02.2024 வரை http://www/dge/tn/gov.in என்ற இணையதளத்தில் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பதிவிறக்கம் செய்வதில் காலதாமதம் கூடாது

இதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு சார்ந்த பள்ளியின் தலைமை ஆசிரியர் / முதல்வர்களே பொறுப்பேற்க நேரிடும் என்பதால் இப்பொருள் சார்ந்து தனிக் கவனம் செலுக்கப்பட வேண்டும்.

**செய்முறைத் தேர்வு விதிமுறைகள்**

1. செய்முறைத் தேர்வுக்கான பாடத்திட்டம், மாதிரி வினாத்தாள் மற்றும் மதிப்பெண் ஒதுக்கீடு பாடவாரியாக சென்னை முதன்மைக் கல்வி அலுவலக இணையதளத்தில் (Edwise Chennai.com) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. செய்முறைத் தேர்வுகள் காலை 8 மணி முதல் 6.00 மணி வரை மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதிகபட்சம் 4 Batch கள் வரை நடத்தலாம்.
3. ஒரு Batch-க்கு அதிகபட்சம் 30 மாணவர்கள் வரை செய்முறைத் தேர்வு நடத்தலாம்.
4. ஒரு பாடத்தில் மாணவர்களின் எண்ணிக்கை 120 மற்றும் அதற்கு கீழ் இருப்பின் ஒரே நாளில் அப்பாடத்தின் செய்முறைத் தேர்வு முடிக்கப்பட வேண்டும் (நாள் ஒன்றுக்கு 4 Batchக்கு குறைவில்லாமல்)
5. மாணவர் எண்ணிக்கை கூடுதலாக உள்ள பள்ளிகளுக்கு ஒரு பாடத்திற்கு 2-க்கும் மேற்பட்ட புறத்தேர்வர்கள் நியமிக்கப்பட்டிருப்பர். 12.02.2024 முதல் 24.02.2024க்குள் அனைத்து மாணவர்களும் (11 மற்றும் 12) செய்முறைத் தேர்வுகள் முடிக்கும் வகையில் திட்டமிடப்பட்டு தேர்வு நடத்தப்பட வேண்டும்.
6. செய்முறைத் தேர்வுக்கான கால அளவு 2.30 மணி நேரம்.
7. **புறத்தேர்வர்கள் செய்முறைத் தேர்வு நடைபெறுவதற்கு முன்பே புறத்தேர்வராக நியமிக்கப்பட்ட பள்ளிகளுக்கு சென்று சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் அகத் தேர்வாளர்களுடன் அறிவியல் ஆய்வக உபகரணங்களக்கேற்ப செய்முறைத் தேர்வுக்கான வினாத்தாட்களை தீர்மானித்துக் கொள்ளலாம்.**
8. முதன்மைக் கண்காணிப்பாளர்களான தலைமையாசிரியர் / முதல்வர்கள் செய்முறைத் தேர்வு நியமன ஆணையின்படி அந்தந்த புறத்தேர்வர்களை தேர்வு தொடங்குவதற்கு ஒரு நாள் முன்னதாகவே விடுவிக்க வேண்டும்.

9. **எக்காரணம் கொண்டும் புறத்தேர்வர்களுக்கான நியமன ஆணை ரத்து செய்யக்கூடாது.**
10. செய்முறைத் தேர்வு நடைபெறும் நாட்களில் விடைத்தாட்கள் அன்றே திருத்தப்பட்டு மதிப்பெண் பட்டியல் முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
11. தேர்வு முடிந்த பின் மதிப்பெண் பட்டியலை கீழ்க்கண்ட நோடல் மையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| செய்முறை மதிப்பெண் சான்றிதழ்கள் ஒப்படைக்கப்பட வேண்டிய இடம் | டான் பாஸ்கோ மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, காசா மேஜர் ரோடு, எழும்பூர், சென்னை-08. | |
| ஒப்படைக்க வேண்டிய நாள் | **11 மற்றும் 12 ஆம் வகுப்பு** | |
| | **முதல் சுற்று** | **இரண்டாம் சுற்று** |
| | **19.02.2024 மாலை 4.00 மணிக்குள்** | **26.02.2024 மாலை 4.00 மணிக்குள்** |

12. செய்முறைத் தேர்வில் (அக மற்றும் புறத் தேர்வு) வழங்கப்பட்ட மதிப்பெண்களை பதிவேடுகளில் எழுதி முதன்மைக் கண்காணிப்பாளர் அல்லது புறத்தேர்வாளர் அல்லது அகத்தேர்வாளர் எக்காரணத்தை கொண்டும் அக / புறத் தேர்வு மதிப்பெண்களை வெளியிடக் கூடாது.
13. புறத்தேர்விற்கு வராத மாணவர்களுக்கு அக மதிப்பெண்கள் இருந்தால் வழங்க வேண்டும். அகமதிப்பெண்கள் இல்லாத பட்சத்தில் "AA" என்றும் புறமதிப்பெண் வரிசையில் "AA" என்றும் மற்றும் மதிப்பெண் வரிசையில் (Total Column) "AA" என்றும் பதிவிட வேண்டும்.
14. மதிப்பெண் பட்டியலில் கையெழுத்திடுவதற்கு முன்பாக முதன்மைக் கண்காணிப்பாளர்கள் மதிப்பெண்கள் மற்றும் அக / புறத் தேர்வாளர்களின் கையெழுத்துக்கள் சரியான இடங்களில் உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
15. தேர்வுகள் முடிந்தபின் அனைத்து மதிப்பெண் பட்டியல்களையும் ஒரே உறையில் வைக்க வேண்டும். (Legal Size Green Cloth Cover)

16. வருகைச் சான்றிதழ் அந்தந்த மையங்களில் பாதுகாக்கப்பட வேண்டும். நோடல் மையங்களுக்கு அனுப்பத் தேவையில்லை.

17. நோடல் மையங்களுக்கு அனுப்ப வேண்டிய உறைகள் பின்வருமாறு

- பொது மற்றும் தொழிற்கல்விக்கான அனைத்து செய்முறைத் தேர்வு மதிப்பெண் பட்டியல்கள் பாட வாரியாகவும் Batch வாரியாகவும் கட்டப்பட்டு நீண்ட பச்சைநிற துணை உறையில் Logsheet உடன் வைக்க வேண்டும். (தேர்வு மைய பள்ளிகள் மற்றும் இணைப்பு பள்ளிகளுக்கு தனித்தனி உறைகள் அமைக்க வேண்டும்.)
- படிவம் A மற்றும் படிவம் B ஆகியவற்றின் 2 (இரண்டு) நகல்களை ஒப்படைக்க வேண்டும்.

18. மதிப்பெண் பட்டியலில் காணக் கூடிய பிழைகள் (கடந்த ஆண்டு)

- அக மதிப்பெண்கள் பதிவிடப்பட்டுள்ளது. ஆனால் புற மதிப்பெண்கள் மற்றும் மொத்த மதிப்பெண்கள் பதிவிடப்படவில்லை.
- மதிப்பெண் பட்டியலில் கையெழுத்துகள் (அக, புறத் தேர்வாளர்கள் மற்றும் முதன்மைக் கண்காணிப்பாளர்கள்) விடுபட்டிருந்தது.

**Note: ஒரு பாடத்திற்காக பதிவிறக்கம் செய்யப்பட்ட மதிப்பெண் பட்டியலை வேறொரு பாடத்திற்கு பயன்படுத்தக் கூடாது.**

மேற்கண்ட பிழைகள் ஏற்படாதவாறு செயல்படுமாறு முதன்மைக் கண்காணிப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை